# இலங்கை வித்தியா போதினி
# THE CEYLON JOURNAL OF EDUCATION
(*Tamil Section.*)

பிரதம பத்திராதிபர் :

திரு. எம். எவ். டீ. எஸ். ஜயரத்ன அவர்கள்



பத்திராதிபர் சபை :

திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள்,

முதலியார் குல. சபாநாதன் அவர்கள்.

திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்.

திரு. எம். எஸ். எம். ஹட்டாட் அவர்கள்.

மனேஜர் :— திரு. சி. குணசேகர.



வருடச் சந்தா ரூபா **3-00**

*சந்தாப் பணத்தை கொழும்பு, வித்தியா கந்தோர், இலங்கை வித்தியா போதினி மனேஜர் என்ற விலாசத்துக்கனுப்பவேண்டும்.*

அறிவித்தல்:—செக் மூலம் பணம் கொடுத்தல். *சில வங்கிகள் ரூ. 10/-க்குக் குறைந்த செக்குகளுக்கும் கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களிலிருந்து வரும் செக்குகளுக்கும் கொமிஷன் எடுக்கின்றபடியால் சந்தாதார் அவ்வகைச் செக்குமூலம் பணம் கொடுக்கும்போது கொமிஷனையும் செக்குகளில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.*

தொகுதி–7 | நவம்பர்/டிசம்பர்—**1949.** | பகுதி–10


பத்திராதிபர் குறிப்புகள்.

## பெற்றோர்-ஆசிரிய ஒத்துழைப்பு

*இலங்கை முழுவதிலும் பெற்றோர்-ஆசிரிய சங்கங்களை ஸ்தாபிப்பதில் வித்தியா பகுதியார் எடுத்துவரும் முயற்சிகளை வாசகர்களின்*

கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். அத்தகைய சங்கங்களை ஸ்தாபிப்பது ஓர் புதிய பிரயத்தனமன்று. பல பாடசாலைகளிலும் காலத்துக்குக்காலம், கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக, பெற்றார்-ஆசிரிய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டனவெனினும், உபயோகம் மிக்க கடைமைகளைச் செய்தனவும் செய்துகொண்டு வருகின்றனவுமான ஒரு சில சங்கங்களைத் தவிர எப்பிரதானமான நோக்கத்தோடு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டனவோ அந்நோக்கம் நிறைவேறிவிட்டதெனக் கூற முடியாது.

பாடசாலை நிர்வாகத்தில் பெற்றார் அனுவசியமாகத் தலையிடுவார்களென்ற காரணம்பற்றி சில பாடசாலைகளிற் பெற்றார்-ஆசிரிய சங்கங்களை ஸ்தாபிப்பதற்குத் தலைமை ஆசிரியர்களும் உதவி ஆசிரியர்களும் சிலவேளைகளில் விருப்பமில்லாதிருந்திருக்கின்றனர். கட்டாயமாக, ஆசிரியர்களின் நியமனத்திலோ மாணவர்களை வகுப்பேற்றுவதிலோ அல்லது பாடசாலை ஒழுக்க விஷயங்களிலோ பெற்றாரைத் தலையிடவிடமுடியாது. இவ்விஷயங்களில் முகாமைக்காரருக்கு அல்லது பாடசாலை ஆசிரியர்களுக்கு மாத்திரம் உரிமையுண்டு.

ஆனால், அஃதெங்ஙனமாயினும் இவ்வியக்கத்தில் துர்ப்பிரயோகம் நுழையக்கூடுமென்ற பயம், தம் பிள்ளைகளின் கல்வி விஷயத்தில் பெற்றாரைப் புறக்கணிப்பதற்குத் தகுந்த நியாயமாகாது. ஒவ்வொரு மாணவன் அல்லது மாணவி சம்பந்தமான தவணை அறிக்கைகள் பெற்றாருக்கு அனுப்பப்படுவது உண்மையே. ஆயினும் இவ்வழக்கம் யாவராலும் ஒப்புக்கொள்ளக்கூடியதல்லவென்பது எமது அபிப்பிராயமாகும். ஏனெனில் அத்தகைய அறிக்கைகள் ஒரு மாணவனின் தேர்ச்சியைப் பற்றிய பூரணமான விளக்கத்தைக் கொடுக்கமாட்டா. ஒவ்வொரு பிள்ளையின் தேவைகளையும் கஷ்டங்களையும் பற்றி வகுப்பாசிரியரோடு கலந்தாலோசிப்பதற்காகப் பெற்றார் இடையிடையே அழைக்கப்படவேண்டும். மாணவர்களிற் பெரும்பான்மையோர்

வெளி மாணவர்களாயிருத்தலினால் ஆசிரியருக்கும் பெற்றாருக்கு மிடையே நெருங்கிய ஒத்துழைப்பிருந்தாலன்றி கல்வி பூரணமற்றதாகவும் பிழையுள்ளதாகவுமேயிருக்கும். தனது வீட்டில் ஒரு மாணவன் எவ்வளவு நேரத்தைப் படிப்பிற் செலவழிக்கவேண்டும், பொதுவாசிப்பு ஓய்வு நேரக் கிரிகைகள், விளையாட்டு, இளைப்பாறுதல் என்ற விஷயங்கள் சம்பந்தமாக ஆசிரியர்கள் பெற்றாருக்கு ஆலோசனை கூறுகின்றிலர் என்பதை யார்தான் மறுப்பர் ?

இப்போதினியின் முந்திய ஒரு வெளியீட்டில் நாட்டின் சிறந்த பிரஜைகளாக மாணவர்களை ஆக்குவதற்கும் குணசீல அபிவிருத்திக்கும் அளிக்கப்படும் பயிற்சியில் ஒழுங்கு செய்யப்பட்ட குழு விளையாட்டுகள் பிரதானமானவையென்பதை அழுத்தமாக எடுத்துக் கூறினோம். கிராமப் புறங்களில், மாணவர்கள் விளையாட்டுகளிற் பங்கெடுத்தற்கு பாடசாலைக்குத் திரும்பிவருவது சாத்தியமில்லை. ஆயினும் பெற்றாருடைய ஒத்துழைப்போடு கிராமத்தில் தகுந்த நிலையங்களில் விளையாட்டுகளை ஒழுங்குசெய்ய முடியும்.

சிறிது காலத்துக்குமுன் பாடசாலைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு சுற்று நிருபத்தில் பெற்றார்-ஆசிரிய சங்கங்களின் இலக்குகளும் நோக்கங்களும் வித்தியாதிபதியவர்களால் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. ஆகவே இவ்விஷயத்தையிட்டு ஈண்டு விளக்கவேண்டியதில்லை. அத்தகைய சங்கங்களின் நோக்கங்களைப் பற்றிய தெளிவான ஒரு விளக்கம் இருக்கும்வரையும் பாடசாலை நிர்வாகத்தில் அல்லது வேலையில் பெற்றார்-ஆசிரிய சங்கங்கள் தலையிடும் என்றும் அதன் விளைவாகப் பாடசாலையின் முன்னேற்றம் தடைப்படும் என்றும் அஞ்ச வேண்டியதில்லை.

பெற்றாரினதும் ஆசிரியர்களினதும் ஒருமித்த முயற்சிகளினால் மாணவரின் பகற் போசனத்திற்றிருத்தம் ஏற்படுத்தப்பட்டதற்கு

இரு உதாரணங்களை ஈண்டுக் கூறுவது சாலப் பொருத்தமாகும். வட மத்திய மாகாணத்தில் பொருளாதாரத்தில் மிகப் பிற்போக்கான ஒரு கிராமத்தில் பகற் போசனத்துக்குத் தேவையான கறிகளைக் கொடுக்கும் பொறுப்பைப் பெற்றூர் ஏற்றுக்கொண்டனர். இதனுல் சோறும் கறியும் கொண்ட பகற் போசனம் சில பாடசாலைகளிற் கொடுக்கப்படுகின்றது. வட மேல்மாகாணத்தில் ஐம்பது பாடசாலைகளுக்குப் போசனம் கொடுக்கும் நோக்கத்தோடு பெற்றூர் ஐக்கிய சங்கமொன்றைப் பெரிய அளவில் ஸ்தாபிப்பதற்கு ஒழுங்குசெய்கின்றனர்.

பரீட்சார்த்த முறைக்காக ஒரு பாடசாலைக்குப் போசனம் கொடுக்கும் பொறுப்பை இச்சங்கம் கையேற்றுவிட்டது. இவ்விஷயத்தில் பெற்றூர் தாமாகவே முதலூக்கம் காட்டியமை சந்தோஷமான சுபசகுனமாகும். பெற்றூர்-ஆசிரிய ஒத்துழைப்பு அதிகம் பிரயோசனப்படக்கூடிய இன்னுமனேக பாடசாலைக் கிருத்தியங்களுண்டு. இது சம்பந்தமாகப் புதிய முயற்சிகள் எடுப்பதற்குப் படிப்பு வருடத்தின் ஆரம்பகாலம் மிகப் பொருத்தமானது. அத்தகைய முயற்சிகளாலடையும் பலாபலன்களைப்பற்றிய விபரத்தைப் போதினியின் எதிர்கால வெளியீட்டில் தருவாம்.

# குடிசனம் பரவியிருக்கும் முறை

குடிசனம் பரவியிருக்கும் முறையினைக் கற்றல் பூமிசாத்திரக் கல்விக்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். ஏனெனில் மனிதனின் சீவியத்துக்கும் சூழலுக்குமுள்ள தொடர்பை அது நன்கெடுத்துக் காட்டுகின்றது. இலங்கையிற் குடிசனம் பரவியிருப்பதைக் காட்டும் தேசப் படத்தை நீங்கள் உற்று நோக்குவீர்களாயின் குடிசனச் செறிவுக்கும் மழை வீழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பிருத்தலை எளிதில் அவதானிப்பீர்கள். இதற்குக் காரணம் எங்கள் வாழ்க்கை விவசாயத்தில் தங்கியிருப்பதேயாகும்.

இலங்கைத் தேசப்படமொன்றையெடுத்துப் பின்வரும் எல்லைகளைக் குறிப்பிடுங்கள். தெதுருஓயாவிலிருந்து கரைநீளம் மாத்தளை வரையும் ஒரு கோடு கீறுங்கள்; அங்ஙனமே மாத்தளையிலிருந்து நுவரெலியாவுக்கும் அதிலிருந்து ஹப்புத்தளை வரைக்கும் ஒரு கோடு கீறுங்கள். இக்கோட்டினைத் தென் மேற்குத் திசையாகப் பலாங்கொடைக்கும் இரத்தினபுரிக்கும் நீட்டிக் கீறிவிடுக. பின்னர் றக்வானைக் குன்றுகளுக்குத் தென்றிசையாக வளைந்து மாத்தறைப் பட்டினம்வரை நீட்டிக் கீறுக. இங்ஙனம் கீறிவிடுவதால் இலங்கையினை இரண்டு குடிசன வலயம் கொண்டதாகப் பிரித்துவிடுவீர்கள். தென் மேற்குப் பிரிவில் ஒவ்வொரு சதுர மைலுக்கும் 250 ஆட்களுக்குக்கூடிய வீதமும், இலங்கையின் எஞ்சிய முக்காற் பாகத்தில், இரண்டு இடங்களைத் தவிர, ஒவ்வொரு சதுர மைலுக்கும் 200 ஆட்களுக்குக் குறைந்த வீதமும் உண்டு. இனி இப்பிரிவுகளை ஆராய்ந்து பார்ப்போம்.

(a) பண்டைக் காலத்தில் ஈரலிப்பு வலயத்தில் மக்கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டனர். விவசாயம் வர்த்தக முறையில் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே மக்கள் இவ்வலயத்திற் குடியேறினர். காடுகளிற் கறுவாப்பட்டை சேகரிக்கும் முறையிலிருந்தே இக்குடியேற்றம் ஆரம்பமாயிற்று. அதன் பின்னர் போர்த்துக்கேய, ஒல்லாந்த அதிகாரிகள் செல்வம் ஈட்டுதற்காக, அவர்களுக்குத் தேவையான மிளகு, தேங்காய், பாக்கு முதலியவற்றைப் பயிரிடும் தொழில் இவ்வலயங்களில் ஆரம்பமாயிற்று. முன்னொரு காலத்தில் அடர்ந்த காடுகளாகக் கிடந்த இடங்களில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் புதிய பயிர்கள் செய்கை பண்ணப்பட்டன. இவ்விதமாக ஈரலிப்பு வலயத்திலுள்ள பள்ள நிலங்கள் பண்படுத்தப்பட்டு அவற்றில் றப்பர் பயிர் செய்யப்பட்டது. ஈரலிப்பு வலயத்திலுள்ள மேட்டுநிலங்கள் திருத்தப்பெற்று அவற்றில் கோப்பிப்பயிர் செய்கைபண்ணப்பட்டது. பின்னர் அவை தேயிலைத் தோட்டங்களாக்கப்பட்டன. விளைவுப் பொருளை ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் இந்த விவசாயம் ஆரம்பிக்கப்பட்டதால் போக்கு வரத்துச் சாதனங்களான அநேக தெருக்களும் புகையிரத வீதிகளும் அமைக்கப்படலாயின. ஈரலிப்பு வலயத்தின் விளைவுப் பொருட்களைக் கப்பல்கள் மூலம் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் மத்திய ஸ்தானமாகக் கொழும்பு அமைந்திருத்தலால், ஈரலிப்புவலயத்திலுள்ள விளைவுப் பொருட்களைக் கொழும்புக்குக் கொண்டுவருவதற்கு உதவியாகவே இத்தெருக்களும் புகையிரத வீதிகளும் அமைக்கப்பட்டன.

இத்தகைய விவசாயம் அநுகூலமாதல் இலங்கையின் தென் மேற்குப் பகுதியில் மழைநீர் போதிய அளவுக்குக் கிடைக்கக்கூடிய தன்மையிலேயே பிரதானமாகத் தங்கியிருக்கின்றது. அங்ஙனம் மழைநீர் கிடையாது போகுமானால் தோட்டப் பயிர்ச்செய்கை குன்றி அதன் பயனாக ஈரலிப்பு வலயத்தில் குடிசைச் செறிவும் குன்றிவிடும்.

ஈரலிப்பு வலயத்தில் குடிசனச் செறிவுள்ள இடங்கள் யாவை யென ஆராயுமிடத்து அவை துறைமுகங்களாகவும் விளைவுப் பொருட் களைச் சேகரிக்கும் மத்திய ஸ்தானங்களாகவும் இருத்தலைக் காணலாம். இலங்கையின் தென்மேற்குப் பகுதியில் காலியே பிரதான துறைமுக மாக விளங்கியது. ஆனால் தென்னை, றப்பர், தேயிலைத் தோட்டங்கள் இருக்கும் இடங்களை நோக்குமிடத்து கொழும்பு மிகவும் வசதியான பாதையில் அமைந்திருந்தமையால் கொழும்பு சிறந்த துறைமுகமாக மாறத் தொடங்கியது. சிறிது காலத்துக்குள் ஏனைய பட்டினங்களைப் பார்க்கிலும் சிறந்த துறைமுகமாகக் கொழும்பு விருத்தியடைந்தது. இப்பொழுது கொழும் பில் 350,000 சனங்களுக்குமேல் சீவிக்கின்றார்கள். ஆனால் காலியில் 49,000 குடிசனங்களும் கண்டியில் 50,000 குடிசனங்களும் சீவிக் கின்றனர்.

விவசாய விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நோக்கத்து டன் பயிர் செய்கைபண்ணப்படும் நிலங்கள் உள்ள பிரதேசத்தில் விளைவுப் பொருட்களைச் சேகரிக்கும் மத்தியஸ்தானம் இன்றியமை யாததொன்று. அத்தகைய குடியிருப்புப் பகுதிகளுக்குத் தெருக்கள் அல்லது புகையிரதவீதிகள் அல்லது இவை இரண்டின் மூலம் போக்கு வரத்து வசதிகள் உண்டு. இவ்வாறே காலியும் மாத்தறையும் அவற் றைச் சுற்றியுள்ள பின் நிலங்களிலிருந்து தெருக்கள், புகையிரத வீதி கள் மூலம் தொடர்புடைய மத்திய ஸ்தானங்களாக விளங்குகின்றன. அங்ஙனமே களுத்துறையும் பாணந்துறையும் விளங்குகின்றன வர்த்தக விவசாயம் செய்யப்படும் பின்நிலங்களற்ற கிந்தோட்டை, களுத்துறை அல்லது பாணந்துறையிலும் மிகச் சிறியபட்டினமாகும். கிந்தோட் டையில் 1000-ம் குடிசனங்கள்வரை சீவிக்கின்றனர். ஆனால் களுத் துறையில் அல்லது பாணந்துறையில் 18000-ம் குடிசனங்களுக்கு மேற்பட இருக்கின்றனர். கரையோரத்தில் சலாபம் நீர்கொழும்பு

போன்ற பட்டினங்கள் விளைவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஸ்தானங்களாக விளங்குகின்றன. அங்ஙனமே உள்நாட்டிலும் குருநாகல், அவிசாவலே, ஹோறனே, இரத்தினபுரி முதலிய பட்டினங்கள் உண்டு. மலைநாட்டுத் தேயிலைத் தோட்டப்பகுதிகளில் மாத்தளை, கண்டி, (50000), தொப்பி தோட்டம் முதலிய பட்டினங்கள் விளைவுப் பொருட்களைச் சேகரிக்கும் மத்திய ஸ்தானங்களாக விளங்குகின்றன. மேலே குறிப்பிட்ட மூன்று பட்டினங்களைத் தவிர, வேறு அத்தகைய பட்டினங்களும் உண்டு. இத்தகைய மத்திய ஸ்தானங்கள் ஒவ்வொன்றினதும் செழிப்பு, அந்தஸ்தானம் எத்தகைய வர்த்தக விவசாயத்தால் முக்கியத்வம் அடைந்ததோ, அத்தகைய விவசாயம் விருத்தியடைவதில் அல்லது குன்றுவதில் தங்கியிருக்கிறது. இந்தக் குடியிருப்புப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒருவகையான வியாபாரிகள் அல்லது வர்த்தகர்கள் காணப்படுகின்றார்கள். அவர்கள் விளைவுப் பொருட்களை வாங்கி யேற்றுமதி செய்வதில் அல்லது தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டிய சாமான்களை விற்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கிராமக் குடியிருப்புகள் அழிவுறும் அறிகுறிகள் காணப்படுகின்றன. அவர்களின் பொருளாதார வாழ்க்கைகுன்றி அற்றுப்போகும் நிலைமைக்கு வந்துவிட்டது. தோட்டப்பயிர்ச் செய்கை விருத்தியடைந்ததன் பயனாக, காய்கறி, பாக்கு, வெற்றிலை, பயிர்செய்யப்பட்ட சிறு தோட்டங்கள் மறையத் தொடங்கின. எனவே தென்மேற்குப் பள்ள நிலங்களிலுள்ள அநேக கிராமவாசிகள் தோட்டத்தொழிலாளர்களாக அல்லது பட்டினவேலையாட்களாக மாறிவிட்டனர். இவர்களே நிலமற்ற வகுப்பினரைச் சேர்ந்தோராவர். நிலமற்ற கிராமத் தொழிலாளி வியாபார மந்தத்தினாற் பாதிக்கப்படுகிறான். தேங்காயின் அல்லது றப்பரின் விலை வீழ்ச்சியடைந்தால், அவனுக்கு வேலை இல்லாமற் போகிறது. மேலும் அவனுக்குச் சொந்த நிலமில்லாதபடியால்,

அவனுடைய சீவியத்தைக் கழிப்பதற்கேற்ற உணவு பெறுவதே கஷ்டமாகி விடுகின்றது. நிலமற்ற பட்டின வேலையாளும் வியாபார மந்தத்தினுற் பாதிக்கப்படுகிறுன். தோட்டப் பயிர்ச்செய்கைத் தொழில் லாபம் குன்றுமாயின் அவன் வேலையில்லாமற் கஷ்டப்படவேண்டியவனுகின்றுன். கூலியாளாக வேலை செய்பவனுக்கும் எஞ்சினீயரிங் கம்பனிகளில் தேர்ச்சிபெற்ற தொழிலாளியாக வேலைசெய்பவனுக்கும் இக் கஷ்டம் நேரிடுகின்றது.

நம் நாட்டில் முக்கியமான பிரச்சினை யொன்றுளது. நிலமற்ற விவசாயிக்கு நிலம் கொடுத்தல் வேண்டும்; வேலையற்ற பட்டினவேலையாட்களுக்கு வேலை கொடுத்தல் வேண்டும். முற்கூறிய வகுப்பினருக்குக் கூடுதலான நிலத்தைப் பண்படுத்திக் கொடுத்தல் வேண்டும். மற்ற வகுப்பினருக்குச் சிறு கைத்தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அவற்றில் வேலைகொடுத்தல் வேண்டும்.

குடிசனச் செறிவுடைய ஏனைய இடங்கள் யாழ்பாணக்குடாநாடும், மட்டக்களப்புக்கு வடக்கிலும் தெற்கிலுமுள்ள வலயமுமாகும். தரையின்கீழ் போதிய நீரைக்கொண்ட சுண்ணும்புக்கற் பூமியே யாழ்ப்பாணக்குடாநாடாகும். வரண்ட பூமிக்கு இது ஒரு வரப்பிரசாதமென்றே சொல்லலாம். இத்தகைய நீரும் கிடைக்காதிருக்குமானுல், யாழ்ப்பாணத்திலே கரையோரமாக மீன்பிடித் தொழிலுக்காகச் சிறு குடியிருப்புகள் காணப்பட்டிருக்குமேயன்றி, இப்பொழுது காணப்படுவதுபோல மனிதர்கள் குடியேறியிருக்க மாட்டார்கள் என்பதிற் சந்தேகமில்லை. கிணறுகள் தோண்டிப் பெறும் நீரைக்கொண்டு விவசாயிகள் தங்கள் காணிகளிற் பயிர்செய்கின்றுர்கள். யாழ்ப்பாணக்குடாநாட்டின் மொத்தப் பரப்பில் 25 சதவிகிதமே பயிரிடத்தக்க நிலமாக விருத்தலின், கிடைக்கக்கூடிய பயிரிடத்தக்க நிலத்தில் பயிர்ச்செய்கை மிகவும் துரிதமாகச் செய்யப்படுகின்றது. வரண்ட பிரதேசத்தில்பயிர்களும் மிருகங்களும் மக்களும் உயிர் வாழ்வதற்கு இன்றியமை

யாதது தண்ணீர்தான். தரைக்குக்கீழ் தண்ணீர் காணப்படுதலால் யாழ்ப்பாணக் குடாநாட்டுமக்கள் நிலத்திற் பயிரிட்டுத் தங்கள் ஜீவியத்தை நடத்தக்கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே ஒருவகையில் அவர்கள் பாக்கியசாலிகள் என்றே கூறலாம். யாழ்ப்பாணத்து மக்கள் வியர்வை சிந்த வேலை செய்து தம் தொழிற்றிறமையைக் காட்டிய போதிலும், விவசாய விளைவைக்கொண்டு அங்குள்ள எல்லா மக்களும் போதிய உணவைப் பெறமுடியாது. எனவே அவர்கள் குடாநாட்டை விட்டுப் பிறஇடங்களுக்கும் பிறதேசங்களுக்கும் செல்வாராயினர். அநேகர் அரசாங்க வேலைகளிலும் வேறு தொழிற்றுறைகளிலும் வேலைக் கமர்ந்தனர்.

எனவே, குடிசனம் நெருக்கமாகவுள்ள இடங்களுக்கும் தண்ணீர் நம்பிக்கையாகப் போதிய அளவு கிடைக்கக்கூடிய இடங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருத்தலைக் கண்டோம். இலங்கையின் தென்மேற்குப் பகுதியிலுள்ளஉஷ்ணப் பிரதேசத்தில்தண்ணீர்போதிய அளவு கிடைப்பதால், அதிற்செய்யப்படும் தோட்டப்பயிர்ச் செய்கை நம் நாட்டின் செழிப்புக்கு ஒரு வழிவகையாக அமைந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்குக்கீழ் போதிய அளவு தண்ணீர் கிடைக்கப்பெறுவதால், அவ்விடத்தில் சிறு தோட்டப்பயிர்ச் செய்கை அநுகூலமடைவது சாத்தியமாயிற்று. கிழக்குமாகாணத்தில், விசேஷமாக மட்டக்களப்புக்கண்மையில், கடல்படு திரவியமும் பயிர்ச்செய்கையும் சேர்ந்து அங்குள்ள மக்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாக விருக்கின்றன. இனி, குடிசனம் நெருக்கமற்ற பிரதேசங்களை கவனிப்போம். அவற்றை மூன்று பகுதிகளாகப் பகுக்கலாம்.

1. தென்மேற்றிசையிலுள்ள சீதோஷ்ண மலைப்பிரதேசம்.

2. மத்திய மலைநாடுகளையுடைய உஷ்ணவலயம்.

3. பள்ள நிலங்களையுடைய உஷ்ணவலயம்.

1. நக்வான மலைத்தொடர்கள், தோட்டப்பயிர்ச்செய்கை விருத்தியாவதற்கு முன்னர் இலங்கையின் மத்தியபாகத்திலும் தென்மேற்குப் பாகத்திலும் மலைப்பிரதேசங்கள் எந்நிலைமையிலிருந்தனவோ அதேநிலையில், வெறும் காடுகளாக இருக்கின்றன. தென்மேற்குப் பாகத்திலுள்ள மத்தியவலயத்தின் பள்ளத்தாக்குகளில் ஆங்காங்கு சில கிராமங்கள் இருக்கின்றன. இவை குக்கிராமங்களாகவும் குடிசனநெருக்கமில்லாதனவாகவும் காணப்படுகின்றன. இப்பிரதேசத்திலுள்ள காடுகள் அழிக்கப்பெற்று, றப்பர் அல்லது வேறு தோட்டப்பயிர்கள் உண்டாக்கக்கூடிய காலமும் ஒருசமயம் வரக்கூடும். அங்ஙனம் வந்தால் நக்வான—தெனியாய மலைத்தொடர்களிலும், ஹினிதும மலைத்தொடர்களிலுமுள்ள காடுகள் குடிசனம் செறிந்திருக்கும் பிரதேசங்களாக மாறவும் கூடும்.

2. மாத்தளை, நுவரெலியா, அப்புத்தளைஎன்னும் இடங்களைத்தொடும் கோட்டிற்குக் கிழக்குப்பக்கமாகவுள்ள மத்தியமலைப் பிரதேசத்தில், குடிசனம் நெருக்கமற்ற பகுதி காணப்படுகிறது. இப்பகுதியில் மழைவீழ்ச்சி 75''க்குக் குறையவே உண்டு. இம்மலைப்பிரிவுகளுட் பெரும்பாலானவை புல்வெளிகளாகவே யிருக்கின்றன. இத்தகைய விசாலித்த புல்வெளிகளை மக்கள் இன்னும் பயன் படுத்திக் கொள்ளவில்லை. பீடபூமிகளில் மட்டும் நெல் விளைவிக்கப்படுகின்றது. அத்தகைய நெல் நிலங்கள் மிகவும் விசாலமானவையல்ல. மேலும் பண்டைக்காலத்தில் மலைச்சாரல்களில் இருந்த நீர்ப்பாசன வாய்க்கால்கள் தூர்ந்துவிட்டமையால் நெற்பயிர்ச்செய்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அவற்றில் விளையும் நெல் சிறிய தொகையினருக்கு உணவளிக்கவே போதியதாக விருக்கின்றது. இப்பகுதி குடிசனம் நெருக்கமாக வாழும் மேற்குப் பகுதியிலிருந்து புறம்பு பண்ணப்பட்டிருத்தல் காரணமாக, வேறுவகையான பயிர்ச்செய்கை எதற்கும் போதிய ஊக்கம் அளிக்கப்படவில்லை. குறைவான மழை வீழ்ச்சி காரணமாக இப்பகுதியில்

தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியடையவில்லை. இதன்பயனாக இப்பகுதியில் தெருக்களும் வேலைபெறும் துறைகளும் குறைவாகக் காணப்படுகின்றன. இத்தகைய காரணங்கள் யாவும் மத்தியமலைப் பாகங்களின் கிழக்குப்பகுதியை விருத்தியடையாத நிலப்பாகமாகச் செய்துவிட்டன. எனினும், இப்பகுதியே பண்டொருஞான்று கண்டிராச்சியத்தின் நடுநாயகமாக விளங்கிற்றென்பதை நினைவுகூரும் பொழுது பெரிய ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. இதனைத் தரிசித்த நொக்ஸ் என்னும் சரித்திரவறிஞர் பாலும் தேனும் பொங்கிவழியும் பொன்னுடென இந்நாட்டைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 1818-ம் ஆண்டில் மலைநாட்டினரை அடிமைப்படுத்தும் நோக்கமாக இந்நாட்டினை அழித்தமையே அதன் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும். இதனோடுகூட இந்நாட்டைச் சீரியமுறையிற் பயன்படுத்த எவ்வித திட்டமும் வகுக்கப்படாமையால், இந்நாடு வறுமையால் வாடியது. இதனையுணர்ந்த தேசாதிபதி கால்டிக்கற் அவர்கள் கண்டிநாடுகளுக்கு அதிகமான பிரதிநிதிகள் இருக்கவேண்டுமெனச் சிபார்சு செய்தார்கள். இலங்கையின் புதிய பாராளுமன்றத்தில் அங்ஙனமே கூடிய பிரதிநிதிகள் இருக்கின்றார்கள். . தற்போதைய அரசாங்கம் இந்நாட்டின் அபிவிருத்தியில் போதிய ஊக்கம் செலுத்துமென எதிர்பாக்கப்படுகின்றது.

கடைசியாக, உஷ்ணவலயப் பள்ளநிலங்களைக்கவனிப்போம். இது பண்டைக்காலத்தில் புகழ் ஈட்டித்தந்ததுபோலவே இலங்கையின் எதிர்காலச் சுபீட்சமும் இப்பகுதியிலேயே தங்கியிருக்கிறது. நம் நாடு பண்டைப் புகழை அடைவதற்கு உற்பாதமாக அண்மையில் ஏற்பட்ட குடியேற்றத் திட்டங்கள் விளங்குகின்றன. இந்நாட்டிலுள்ள நிலத்தைப் பயன்படுத்தற்கும், குடியேறுவதற்கும் மக்கள் நிரந்தரமாக வாழ்ந்து இப்பகுதியின் கால நிலைக்கேற்ற உணவுத் தானியங்கள், பழந்தருமரங்கள், தும்பு, எண்ணெய்தரும் விதைகள், கரும்பு முதலிய வேறு பயிர்களைச் செய்கை பண்ணுவதற்கும் தண்ணீர்தான்

ஜீவநாடியாக இருக்கின்றது. இலங்கையில் சுவாத்தியத்திற்கேற்ற கால நிலை இப்பகுதியிற்றான் உண்டு. மலேரியாக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகளை அழித்து விட்டால் இப்பகுதி செல்வம் கொழிக்கும் நாடாகத் தன் பழைய நிலைமைக்கு வந்துவிடும்.

உஷ்ணவலயத்தில் வேறு வசதிகளுமுண்டு. இப்பகுதியைச் சார்ந்த கரையோர இடங்களில் மீன் பிடித்தொழில் அநுகூலமாக நடைபெற இடமுண்டு. நீண்ட கோடைகாலம் இருப்பதால், அக் காலத்தில் மீன்களைக் கருவாடாக்கி உள்நாட்டுச் சந்தைகளில் விற்க முடியும். உப்பு விளைவிப்பதற்கும் நீண்ட கோடைகாலம் மிகவும் உகந்ததாயிருக்கிறது. உப்புவிளைவு கூடிய அளவு பெருப்பித்துச் செய்யப்படின், அநேக தொழிற்சாலைகளை நிறுவிநடாத்தப் போதிய ஆதாரமாக விருக்கும்.

இப்பகுதி மிருகவளர்ப்புக்கும் உகந்ததாயிருக்கிறது. வெள்ளாட்டுப்பண்ணைகளும் மாட்டுப்பண்ணைகளும் அநுகூலமாக நடத்த இடமுண்டு. உணவுப் பொருட்களையும் விற்பனை செய்யக்கூடிய பயிர் வகைகளையும் மிருகவளர்ப்பினையும் ஆதாரமாகக் கொண்டு பல்வேறு வகைப்பட்டவிவசாயத்தை அதிகமானகிராமக் குடிசனங்களின் வாழ்க்கையைச் செழிப்புறச் செய்யலாம். புராதன இலங்கையின் கொள்கை யானது விவசாயத்தையே விவசாய சமூகத்தின் சுபீட்சத்துக்கு அடிப் படையாகக் கொண்டுள்ளது. எனவே வரட்சி வலயம் சம்பந்தமாக தற்கால இலங்கையும் பண்டைக்காலக் கொள்கையைப் பின்பற்றுதலால் அதிக பயனடையமுடியும். ஏனெனில் காலக்கழிவினுல் இலங்கையின் இயற்கையமைப்பு மாறுபடவில்லை யென்பதை யாம் மறந்து விடுதல் கூடாது.

# இலக்கியங் கற்பித்தல்

## ஐந்தாம் பிரிவு

## பிற இலக்கிய வகைகள்

(முற்றொடர்)

5 நாடகங்கள்

முத்தமிழில் நாடகத் தமிழும் ஒன்றாகும். தமிழ் மொழியின் தொடக்கத்திலிருந்தே நாடகத்தமிழ் வளர்ந்து வந்துளது. அகத்தியத்தில் நாடகத் தமிழுக்கும் இலக்கணங் கூறப்பட்டுள்ளது' முதல், இடைச் சங்கங்களில் பல நாடக நூல்களும் நாடக இலக்கண நூல்களும்(1) தோன்றின. இந்நூல்களிற் பலவற்றின் பெயரினை மாத்திரமே நாம் இப்பொழுது அறிகின்றோம். சங்க காலத்திலும் அதனையடுத்த காலத்திலும் நாடகங்கள் நடிக்கப்பட்டனவென்பதும், பலர் திரள் திரளாக அவற்றைப் பார்த்து மகிழ்ந்தனர் என்பதும் இன்னும் பல செய்திகளும் தமிழ் நூல்களால்(2) அறியப்படுகின்றன.

"இவ்வாறு தோன்றி வளர்ந்த நாடகத் தமிழ் வீழ்நிலையை அடையப் புகுந்தது. அதற்குற்ற காரணம் யாது? ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியருஞ் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகுகின்றதென்ற போலிக் கொள்கை உடையவராய்த் தமது நூல்களிற் கடியப்படுபவற்றுள் நாடகத்தையுஞ் சேர்த்துக் கூறினர்.

---

(1) பஞ்ச பாரதீயம், பரதம், முறுவல், சயந்தம், செயிற்றியம், குணநூல், மதிவாணர் நாடகத் தமிழ்நூல்.

(2) ''பாடலோர்ந்தும் நாடக நயந்தும்''—பட்டினப்பாலை; ''கூத்தாட்டவைக் குழா அத்தற்றே பெருஞ்செல்வம் போக்கும் அது விளிந்தற்று''—திருக்குறள்.

அக்காலத்திருந்த அரசர்களுக்குந் துர்ப்போதனை செய்து நாடகத் தமிழைத் தலையெழ வொட்டாது அடக்கிவந்தனர்.''(3)

இந்த உண்மையையும் சங்க காலத்தில் நாடகம்வளர்ந்த வரலாற்றையும் அறியாதார் பலர் நாடகம் புதியதொரு இலக்கியம் என்று கருதவுங் கூறவும் முற்பட்டு இடர்ப்பட்டுளர். சென்ற இருநூற்றாண்டுகளிலும் வடமொழியிலும் ஆங்கிலத்திலுமுள்ள நாடக நூல்களைப் பின்பற்றித் தமிழறிஞர் பல நாடகங்களை எழுதியுள்ளரெனினும் இவர்களுக்கு முன்னிருந்த தமிழ்ப் புலவர்களும் நாடக நூல்களைப் பாடியுளர். பள்ளு, குறவஞ்சி எனும் பிரபந்தங்கள் ஈண்டுக் குறிப்பிடத்தக்கன. இவை பாட்டுக்களால் மாத்திரமே இயற்றப்பட்டன வெனினும் எளிய இனிய சொற்களால் உழவர், குறவர் முதலியவர்களுடைய வாழ்க்கையைப் புனைந்து காட்டுஞ் சித்திரங்களாக விளங்குகின்றன. இக்காலத்து நாடக நூல்களிலுள்ள களம் காட்சி முதலிய பிரிவுகளையிவற்றிற் காணமுடியாது. ஆனால் இப்பிரிவுகளை அமைத்து நடிக்கத்தக்க முறையில் இவை பாடப்பட்டுள்ளன. உதாரணத்துக்கு முக்கூடற் பள்ளு என்னும் நூலை எடுத்துக்கொள்வோம்.

இந்நூலில் வரும் பாத்திரங்கள் :

பள்ளன் (அழகக் குடும்பன்)
மனைவியர் இருவர் 1, முக்கூடற் பள்ளி, 2, மருதூர்ப் பள்ளி)
பண்ணைக்காரன்
இடையன்
பள்ளர்
பள்ளியர்

முதலாங் களம்

காட்சி 1. பள்ளியர் தோற்றுதலும் பள்ளன் அவர்களைச் சந்தித்தலும்

(3) தமிழ் மொழியின் வரலாறு—பக் 41 வி. கோ. சூரியநாராயண சாத்திரிார்.

காட்சி 2. அவர்கள் குடித்தரமும் நாட்டு வளமுங் கூறல்

காட்சி 3. மழைக் குறியும், ஆற்றுவரவும், வெள்ளமும்

இரண்டாங் களம்

காட்சி 1. பண்ணைக்காரன் வரவும் மூத்தபள்ளி முறையிடும் இளைய பள்ளி மாற்றமும்.

காட்சி 2. பண்ணைக்காரனும், பள்ளனும், இடையன் வரவும்

காட்சி 3. மூத்த பள்ளி ஆண்டைக்கு முறையிடுதலும் பள்ளனைத் தொழுவில் அடித்தலும்

காட்சி 4. இளைய பள்ளி வருந்தலும் மூத்த பள்ளி பள்ளனை விடுவித்தலும்

மூன்றாங் களம்

காட்சி 1. பள்ளன் முகூர்த்தம் பார்த்து உழச்செல்லுதல்

காட்சி 2. பள்ளனை மாடு முட்டப் பள்ளிகள் வருந்தல்

காட்சி 3. பள்ளன் எழுந்து உழுதல், நாற்றுப் பதித்தல், பயிர் விளைவு, நெற்கணக்கு முதலியன.

நாலாங் களம்

காட்சி 1. மூத்தபள்ளி தன்பங்கு போதாதென்று முறையிடுதல்

காட்சி 2. மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் ஒருவரை ஒருவர் ஏசுதல்

காட்சி 3. இருவருஞ் சமாதானமடைதல்

இத்தகைய நாடக இயல்புகள் நன்குவாய்ந்த பள்ளு, குறவஞ்சி முதலிய நூல்களின் பின்னர் 19ஆம் நூற்றாண்டில் நாடக இலக்கணங் களைத் தழுவிய பல நூல்களைத் தமிழறிஞர்கள் எழுதினர். தொடக்கத் தில் எழுதப்பட்ட நாடகங்கள் யாவும் பாரத இராமாயணக் கதைகளைத் தழுவியே எழுந்தன. சுவாமிநாதபிள்ளை எழுதிய இராம நாடகம், கந்தையாபிள்ளை எழுதிய இராம விலாசம் எனுமிரண்டும் இராமா யணத்தோடு தொடர்புடையன. அர்ச்சுன நாடகம், சுபத்திரை நாடகம், பாரத விலாசம், சகுந்தலை விலாசம், தருமபுத்திர நாடகம், அபிமன் நாடகம், அல்லி நாடகம் முதலியன பாரதக்கதைகளைக் தழுவி எழுந்தன. தேவசகாய நாடகம், பதும புராணி நாடகம் சீமந்தினி நாடகம் என்பன சமயச்சார்புடையன.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எழுதிய மனோன்மணீயம் எனும் நாடகம் தமிழ் நாடக நூல்களுள் தனிச் சிறப்பு வாய்ந்தது. மறைமலை அடிகள் இயற்றிய சாகுந்தல நாடகம் அறிஞர்களுக்குப் பெருவிருந் தளிக்குந் தன்மையது. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் மொழிபெயர்த் தியற்றிய 'மண்ணியற் சிறுதேர்' எனும் நாடகம் நாடகக் காப்பிய இலக்கணங்கள் நிறைந்து விளங்குகிறது. நாடகத் தமிழினை நன்கு வளர்க்க வேண்டுமென்று பல்லாற்றானும் உழைத்த சூரிய நாராயண சாத்திரியார் எழுதிய ரூபாவதி, கலாவதி, மான விஜயம் எனும் நாடகங்கள் யாவரும் படித்தின்புறுதற்கேற்றன; பாட நூல்களாகக் கலாசாலைகளிற் கற்பிக்கத்தக்கன.

இனி நாடக நூல்களின் இயல்பினையும் அமைப்பினையுஞ் சிறிது ஆராய்வோம். நாடகம் இலக்கிய வகைகளில் ஒன்றாயிருப்பினும் இதற்கும் ஏனையவற்றிற்கும் வேறுபாடுகள் பலவுள. நாடகம் காதுக்கு மாத்திரமன்றிக் கண்ணுக்கும் ஒரே நேரத்தில் விருந்தளிக்கிறது. வாழ்க்கையை நேரே பிரதிபிம்பித்துக் காட்டுகிறது. பலவருடங்க ளாகப் பலவிடங்களில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நாடக மேடையில்


இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற் காட்டுகிறது. குறித்த சிலர் பெற்ற அநுபவங்களை, நாடகத்தைப் பார்ப்போர் யாவரும் பெற்றின் புற வாய்ப்பளிக்கிறது. யாவர்க்கும் இலகுவில் இன்பத்தை ஊட்டி உள்ளத்தில் உணர்ச்சியை விறிட்டெழச்செய்யும் ஆற்றலும் வாய்ந்தது. நிற்க,

நாடக நூலாசிரியர்கள் மற்றைய இலக்கிய வகைகளைச் சிருட்டிக் கும் ஆசிரியர்களைப்போல்நினைத்தபடி தமது நூல்களை ஆக்கமுடியாது. இரண்டு மூன்று மணித்தியாலத்திலே நடித்து முடிக்கத் தக்கதாகக் கதை நிகழ்ச்சிகளைச் சுருக்கி அமைக்க வேண்டும். (4) நாடக மேடை களின் அமைப்பு, அவ்வக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், அவர்க ளுடைய மனப்பாங்கு முதலியவற்றை அவர்கள் நன்கறிந்திருக்க வேண்டும். பலவகையான தொழில்களைச் செய்யும் மக்களின் பேச்சு, உணர்ச்சி, அவர்களுடைய விருப்பு வெறுப்புக்கள் முதலியனவும் அவர் களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பல்வேறு விதமான பாத்திரங்களை யுஞ் சிருட்டிப்பதற்குக் கற்பனுசக்தி மிக இன்றியமையாதது. இக் கற்பனு சக்திதான் கூடுவிட்டுக் கூடுபாயும் ஆற்றலை நாடகாசிரியர்களுக் குக் கொடுப்பது பல்வகை உணர்ச்சிகளையும் தாமாகவே பெற்று அவற்றுக்கு அடிமையாகிவிடாமல் அவற்றைப் பாத்திரங்களிடத்திற் புகுத்திவிடும் ஆற்றலே நாடக ஆசிரியர்களை அளக்குங் கருவியாகும்.

நாடக நூல்களை இன்பியல் துன்பியல் என்று இரு பிரிவாகப் பிரிப்பார்கள். இவ்விருவகை நூல்களிலுமுள்ள நிகழ்ச்சிகள் பெரும் பாலும் ஐந்து கூருக அமையும். இவற்றை நாடக இலக்கண நூல்கள் சந்தி என்று கூறும். முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல்

(4) An Introduction to the study of Literature—Hudson Page 242.

என்பனவே இவ்வைந்துமாகும்[5]. காளிதாசர், சேக்ஸ்பியர், இளங்கோவடிகள் முதலிய சிறந்த நாடக நூலாசிரியர்கள் தமது நூல்களில் இவ்வைந்தினையும் அமைத்துளர். நாடக நூல்கள் பலவற்றில் இவ்வைந்துமே ஐந்து களமாகவுங் கொள்ளப்பட்டுள்ளன. நூல்கள் கூறுங்கதை நிகழ்ச்சிகளுக்கேற்ப இவ்வைந்தும் ஒன்றின் ஒன்று சுருங்கியும், பரந்துஞ் செல்லும். கதையின் உச்ச நிலையாகிய கருப்பம் கதை நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலேனும் நடுப்பகுதியிலேனும், கடைசிப் பகுதியிலேனும் அமையலாம். இதனைப் பின்வருமாறு கோட்டுப் படங்களிற் புலப்படுத்தலாம்.




அ. முகம், ஆ. பிரதிமுகம், இ. கருப்பம், ஈ. விளைவு, உ. துய்த்தல்.

(5) முகம்: Initial Incident, பிரதிமுகம்: Rising action, கருப்பம்: Climax, விளைவு: Denounment, துய்த்தல்: Conclusion.

"முகமாவது எழுவகைப்பட்ட உழவினாற் சமைக்கப்பட்ட பூமியுளிட்ட வித்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலை தோன்றி நாற்றாய் முடிவது போல்வது. கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிருந்துபெருகித் தன்னுட்பொருள் பொதிந்து கருப்ப முற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்ப முதலாய் விரிந்து கதிர் திரண்டிட்டுக் காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது. துய்த்தலாவது விளையப்பட்ட பொருளை அறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்து கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது" — அடியார்க்கு நல்லார் உரை.

நடிப்புடன் கூடிய கதையாதலின் எல்லா இலக்கிய வகைகளுள்ளும் நாடகமே வகுப்பிற் கற்பித்தற்கு மிகப் பொருத்தமானதென்று டோவர் உவில்சன் என்பார் கூறியுளார்(6). வாசிக்கும்பொழுது நன்கு விளங்காத நாடகங்களை நாடக மேடையில் நடிக்கும்பொழுது மிக இலகுவாக விளங்கிச் சுவைக்கலாம் என்பதை ஆசிரியர்கள் மறத்தல் கூடாது. கதை நிகழ்ச்சிகளும், அவற்றின் தொடர்பான உருவமும் நாடக மேடையில் நன்கு புலப்படும். படிக்கும்பொழுது அவற்றைத் தொடர்புபடுத்தி அறிந்துகொள்ளக் கற்பனு சக்தி மிகுதியாக வேண்டப்படும்.

நாடக நூல்களைப் படிக்கத் தொடங்குவதற்கு முன் ஆரம்ப அப்பியாசமாக மாணவர்கள் நாடகங்களை ஆக்கப் பழகிக்கொள்ளுதல் நன்று. மாணவர்களுக்குத் தெரிந்த கதை ஒன்றை நாடகமாக எழுதச் செய்யலாம்(7). முதலாவதாக மாணவர் கதையைச் சொல்ல வேண்டும். பின் அக்கதையில் எத்தனை காட்சிகள் அமையவேண்டும் என்பதைக் கலந்துரையாடித் தீர்மானிக்கலாம். கதையை நடித்தற்கு வேண்டிய பாத்திரங்களைக் குறித்தபின் கதையைக் காட்சி, காட்சியாகப் பிரிக்கலாம். அடுக்க மாணவர்கள் யாவருஞ் சேர்ந்து முதலாங் காட்சிக்குரிய சம்பாஷணையை எழுதல் வேண்டும். சம்பாஷணையை எழுதும்பொழுது வேண்டிய இடங்களில் நாடகமேடை நிகழ்ச்சிக் குறிப்புக்களையும் அமைத்துக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு முதலாவது காட்சியை எழுதிய பின் மற்றைய காட்சிகளை மாணவர்கள் தனித்தனி எழுதி முடிக்கலாம். இக்காட்சிகளுள் சிறந்தவற்றை ஆசிரியர் தெரிந்தெடுத்து நாடகத்தைப் பூரணப்படுத்திவிட்டு மாணவர்களை நடிக்கச் செய்யலாம். தாங்கள் எழுதிய நாடகத்தை நடிப்பதற்கு

6. Of all forms of Literature drama is most suitable for class room purposes, because it is story in action—J. Dover Wilson.
7. The approach to English Literature —Page 81.

மாணவர்கள் மிகுந்த ஆர்வம் உடையவர்களாயிருப்பர் என்பதைக் கூறவேண்டியதில்லை.

நடிக்கத் தொடங்கும்பொழுது மேடை அலங்காரங்கள், பாத்திரங்களுக்கு வேண்டிய உடைகள் முதலியவற்றைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். செலவின்றியுங் கஷ்டமில்லாமலும் காட்சிகளுக்கு வேண்டிய பொருள்களையும் உடைகளையுந் தேடவேண்டும். நடிப்பிலும் எல்லா மாணவர்களையும் பங்குபற்றச் செய்க.

இவ்வாறு மாணவர்கள் தமக்குத்தெரிந்த கதையை நாடகமாக நடித்தபின் அவர்கள் தாமாகவே ஒரு கதையைச் சிருட்டித்து நாடகத்தை எழுதி நடிக்கலாம். நாடகங்கள் பெரும்பாலும் நடிப்பதற்காகவே எழுதப்படுகின்றன என்பதையும் அவற்றை வாசிக்கும்பொழுது அவற்றை நாடகமேடையில் நடிப்பதாகக் கற்பனை செய்தல் வேண்டும் என்பதையும் மாணவர்கள் உணர்ந்துவிட்டால் சிறந்த நாடக நூல்களைச் சுவைக்கும் ஆற்றலை அவர்கள் இலகுவில் பெற்றுவிடுவார்கள்.

இனி ஒரு நாடக நூலைக் கற்பிக்கும் முறைகளை ஆராய்வோம். ஆசிரியருடைய சுவையுணர்ச்சிக்கும், மாணவர்கள் சிறு நாடக நூல்களை எழுதுவதில் பெற்ற அனுபவத்துக்கும் ஏற்க முறைகள் அமையலாம். சில ஆசிரியர்கள் நாடக நூலை வாசிக்கத் தொடங்குமுன் நாடகத்தின் கதையை முன்னுரையாகக் கூறவிரும்புவர். கதையைச் சொல்லும்பொழுது சுருக்கமாயும் நடிப்புடனுஞ் சொல்லல் வேண்டும். வேறு சில ஆசிரியர்கள் மாணவர்களைப் பாத்திரங்களாக நியமித்துப் பகுதி பகுதியாக வாசிக்கச் செய்கின்றனர். மாணவர்கள் முன்னரே நன்கு வாசித்து ஆயத்தப்படுத்தியிருக்காவிடில் வகுப்பில் பொருத்தமான அபிநயங்களுடன் வாசித்தல் மிகக் கஷ்டமாயிருக்கும். நாடக நூலை நன்கு படித்துச் சுவைத்த ஆசிரியர்கள் வாசித்துக் காட்டுதலே சிறந்த முறை

யாகும்(8). ஆசிரியர் வாசிக்கும்பொழுது மாணவர்கள் தங்கள் நூல்களைப் பார்த்துக்கொண்டு பின் தொடரலாம். இடையிடையே நிறுத்தி விளங்காத விஷயங்களை விளங்கப்படுத்தாமல் தொடர்பாய் வாசித்தலின்றியமையாதது. மாணவர்கள் நாடகத்தின் கதையையும் பிரதான பாத்திரங்களின் தொடர்பையும் இயல்புகளையும் அறிந்துகொள்ளத்தக்கதாக நாடகம் முழுவதையும் வாசித்து முடித்தபின் கதையின் உருவத்தையும் பாத்திரங்களையும்பற்றிக் கலந்துரையாடலாம். பின்னர் நாடகத்தை நடித்தல் நன்று. முழுவதையும் நடிக்க முடியாமலிருந்தால் பிரதானமான காட்சிகளையாகுதல் நடிக்கச் செய்தல் வேண்டும். நாடகம் மக்களுக்கு இன்பத்தை யூட்டுகிறதென்பதை அதை நடிப்பதன் மூலமே மாணவர்கள் நன்கு உணர்ந்துகொள்ளலாம்.

கதையின் உருவத்தைப்பற்றிக் கலந்துரையாடும்பொழுது கதையின் தொடக்கம், வளர்ச்சி முடிவு முதலியன ஆராயப்படலாம். முன்னர்க்குறிப்பிட்ட முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் முதலியவற்றைத் தொடர்பாக நிச்சயப்படுத்தல் சாலும். கிளைக்கதைகளையும் பிரித்தறியலாம். கதா பாத்திரங்களைப்பற்றிக் கலந்துரையாடும்பொழுது பிரதான பாத்திரங்களையும் கதை நிகழ்ச்சிக்கு அவசியம் தேவைப்படாத பாத்திரங்களையும் பிரித்தறியலாம். பிரதான பாத்திரங்களின் இயல்புகள், அந்த இயல்புகளை அறிதற்குரிய ஏதுக்கள் முதலியனவும் அறியப்படவேண்டியனவாகும். கலந்துரையாடலில் அதிகமாக மாணவரே ஈடுபடவேண்டும். மாணவர்கள் நாடக நூலைச் சுவைப்பதற்கும் பாத்திரங்களை உயிருள்ள பாத்திரங்களாக அவர்கள் உணர்வதற்கும் கலந்துரையாடல் உதவி செய்யத்தக்கது.

(தொடரும்)

கா. போ. இரத்தினம்.

8. The approach to English Literature Page 85.